# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 26/2024 தேதி-03.03.2026

(P.W.1) . ரவீந்திரன் நாயர்

**குறுக்கு விசாரணை**

நான் காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். 1985 ஆம் ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்புதான் எனது மனைவியின் வீட்டில் தாமசித்து வந்தேன். திருமணத்தின்மூலம்தான் எனது மனைவியை எனக்கு தெரியும் அதற்கு முன் எனக்கு தெரியாது. எனது மனைவியின் குடும்பத்திலுள்ள சொத்து சம்பந்தமான விசயங்கள் திருமணத்திற்கு பின்புதான் எனக்கு தெரியும். இந்த வழக்கை எதற்காக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களுக்கு எழுதித்தந்த சொத்தை அவர்களுடைய வாரிசுகள் 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்ததால் அந்த ஆவணத்தை ரத்த செய்ய கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2 முதல் 10 பிரதிவாதிகள் 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை ரத்தசெய்யவேண்டுமென்று மாவட்ட பதிவாளருக்கு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அனைவர்மேலும் நடவடிக்கை எடுக்ககோரி திருவட்டார் காவல்நிலையத்தில் மற்றும் மாவட்ட காவல்கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்றால் மாவட்ட காவல்கண்காணிப்பாளரிடம் மட்டும் கொடுத்தேன். அது திருவட்டார் காவல்நிலையத்தில் விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார் பொய் புகார் என்று முடித்து வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. புகார் மற்றும் மனுக்களை இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் கொடுத்தேன் என்றால் சரிதான்.

நான் காவல்துறையில் பணிபுரிந்ததால் அந்த செல்வாக்கை வைத்து பிரதிவாதிகளை கஷ்டப்படுத்தவேண்டுமென்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவியும் பிரதிவாதிகளும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் பிறந்து வளர்ந்தது குழித்துறை அருகிலுள்ள பாகோடு என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு நான் எனது மனைவியின் வீட்டில்தான் வசித்து வருகிறேன். எனது தூண்டுதலின் பேரில்தான்

இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னுடைய பிராது மற்றும் முதல் விசாரணையில் 1106 எம்இ வருடத்திய 390 ஆம் எண் பாக உடன்படிக்கைபடி சர்வே எண் 2777/31 எ யில் 9 செண்ட் சொத்து எ மற்றும் பி பட்டிகையாக பாகம் செய்திருப்பதாக சொல்லியிருப்பது எது என்றால் எ பட்டிகையில் 7 வது அயிட்டமும் பி பட்டிகையில் 5 வது அயிட்டம் என்று நினைக்கிறேன். எ பட்டிகை ராமன்பிள்ளை என்பவருக்கு வழங்கப்பட்டது. பி பட்டிகை அவரது சகோதரியான அணஞ்சபெருமாள் என்பவருக்கு வழங்கப்பட்டது. 9 செண்ட் சொத்து பாகம் செய்யப்படவில்லை வழக்கிற்காக நான் பொய்யாக 9 செண்ட் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. பாகப்பத்தரப்படி ராமன்பிள்ளை மற்றும் அணஞ்சபெருமாளுக்கு எத்தனை அயிட்ட சொத்துக்கள் கிடைத்தது என்ற விபரம் தெரியுமா என்றால் விபரம் தெரியாது.

வா.சா.ஆ- 2 ஆவணம் அணஞ்சபெருமாள் வனஜாஷி அம்மாவிற்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அணஞ்சபெருமாளுக்கு வா.சா.ஆ.1 மூலம் கிடைத்த சொத்தைத்தான் வா.சா-ஆ.2 படி வனஜாஷி அம்மாளுக்கு தானம் கொடுத்தார் என்றால் சரிதான். வழக்கு சர்வே எண்ணில் அணஞ்சபெருமாள் எத்தனை செண்ட் சொத்தை தானமாக கொடுத்தார் என்றால் 6 செண்ட். அணஞ்சபெருமாளுக்கு கிடைத்த 6 செண்ட் போல ராமன்பிள்ளைக்கும் 6 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் இருக்கலாம். நான் எனது முதல் விசாரணையில் ராமன்பிள்ளை உயிருடன் இருக்கும்போது பழைய சர்வே எண் 2777/31 எ யில் எ பட்டிகை சொத்தாக கிடைத்த 4.5 செண்டில் 2.250 செண்ட் சொத்து அவருடைய மகளான சரோஜினி பெயருக்கு 384/1963 கிரைய ஆவணப்படி எழுதிக்கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான் மேற்படி கிரைய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 384/1963 கிரைய ஆவணம் எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் திருவட்டார் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

384/1963 கிரைய ஆவணப்படி ராமன்பிள்ளை சரோஜினி பாய்க்கு எந்த சொத்தும் எழுதிக்கொடுக்கவில்லை. சரோஜினி பாய்க்கு நாராயணபிள்ளை என்பவர் மேற்படி கிரைய ஆவணப்படி 1 செண்ட் சொத்தை மட்டும்தான் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு அதுபற்றிய விபரம் தெரியாது. 384/1963 கிரைய ஆவணப்படி பழைய சர்வே எண 2777/30 ல்தான் கிரையம் எழுதி வாங்கியுள்ளார் பழைய சர்வே

எண் 2777/31 எ யில் எந்த சொத்தும் எழுதி வாங்கவில்லை என்றால் வா.சா.ஆ- 5 ஆவணத்தில் சரோஜினி பாய்க்கு 2 1/4 சென்ட் கிரைய ஆவணம் கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளார் அதைத்தான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன்.

வா.சா.ஆ. 5 ஆவணம் சரோஜினிபாய் கஸ்தூரி பாய்க்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். எனது மனைவிக்கு எழுதிக்கொடுக்கவில்லை. வா.சா.ஆ- 5 ஆவணப்படி சர்வே எண் 900/12 ல் 2 1/4 சென்டும் 900/13 எ யில் 1 1/4 சென்டும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 5 ஆவணத்தில் அதன் முன் ஆவணமாக 384/1963 மட்டும்தான் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அது மட்டும்தான் எனக்கு தெரியும். கஸ்தூரி பாய் எனது மனைவியின் அக்கா ஆவார். வா.சா.ஆ. 5 ஆவணத்தில் அதற்கு முன் ஆவணமாக வேறு சில ஆவணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.5 ஆவணப்படி எத்தனை சென்ட் சொத்து கஸ்தூரி பாய்க்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் நீசர்வே எண் 900/12 ல் 2 1/4 சென்டும், 900/13 எ யில் 1 1 /4 சென்டும் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. எனது முதல் விசாரணையில் உயில் ஆவணப்படி அம்மாவீட்டு விளாகத்து குஞ்சுவீட்டு புரையிடம் கடடிடவும் வடக்கணையா 3 சென்று இடவும் எனது மனைவி பார்க்கவி குஞ்சு மற்றும் கஸ்தூரி பாயின் தாயாரான வனஜாஷி அம்மாவிற்கு தனியாக ஒதுக்கி கொடுக்கப்பட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. அந்த உயில் ஆவணப்படி வனஜாஷி அம்மாவிற்கு எந்த சொத்தும் ஒதுக்கி கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல 3 சென்ட் மட்டும் வனஜாஷி அம்மாவிற்கு உயில் ஆவணப்படி ஒதுக்கபட்டது. உயில் ஆவணத்தில் வனஜாஷிக்கு எந்த பாகமும் ஒதுக்கப்படவில்லை என்பது உயில்மூலம் தெளிவாக தெரிய வருகிறது என்றால் சரியல்ல.

உயில் ஆவணத்தில் எத்தனை பட்டிகை சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. யார்யாருக்கு சொத்துக்கள் உயில்ஆவணப்படி ஒதுக்கப்பட்டது என்றால் 9 பிள்ளைகளில் 8 பிள்ளைகளுக்கு மட்டும் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு மூத்த மகளுக்கு ஒதுக்கப்படவில்லை. மூத்தமகள் வனஜாஷி அம்மா என்றால் சரிதான். உயில் ஆவண எண் 1/1965 ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். உயில்

ஆவணப்படி ராமன்பிள்ளை 9 பட்டிகை சொத்துகளாக பிரித்து அதில் 9 வது பட்டிகை சொத்தான ஐ பட்டிகையை எனது மனைவியான பார்கவி குஞ்சு மற்றும் அவரது சகோதரி கஸ்தூரி பாய்க்கு கூட்டாக ஒதுக்கி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். உயில்ஆவணப்படி பழைய சர்வே எண் 2777/31 எ வில் 9 சென்டுள்ள குஞ்சுவீட்டு விளாகம் புரயிடத்தில் சரோஜினியும் வனஜாஷியும் அனுபவிக்கின்ற 3 சென்ட் ஒதுக்கி 6 சென்ட் மற்றும் கட்டிடமும் பட்டிகை சொத்தாக எ முதல் கெச் வரை ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

எ முதல் கெச் ஆக 8 பங்குகள் வைத்து எனது மனைவியின் அம்மா வனஜாஷியை ஒதுக்கி பட்டிகை சொத்துகள் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பழைய சர்வே எண் 2777/31 டி யில் 8 பங்காக பிரிக்கப்பட்டு அது எ முதல் கெச் பட்டிகையாக மேற்படி 8 நபர்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அணஞ்சபெருமாளின் சொத்துக்கள் அனைத்தும் என்னுடைய மனைவியின் தாயாருக்கு கொடுக்கப்பட்டதால் என்னுடைய மனைவியின் தாயாருக்கு இந்த உயில் ஆவணப்படி எந்த சொத்தும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் ஐ பட்டிகை சொத்தை எனது மனைவி மற்றும் அவரது சகோதரிக்கு ஒதுக்கப்பட்டதால் பங்களா கட்டிடத்திலும், தரையிலும் எந்த உரிமையும் கிடையாது என்று உயில் பத்திரத்திலுள்ள 1 வது நிபந்தனைப்படி கூறப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம்.

வா.சா.ஆ. 4 ஆவணம் ராமசந்திரன் மற்றும் பலர் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம், அணஞ்சபெருமாள் வனஜாஷி அம்மாவிற்கு கொடுத்த சொத்துசம்பந்தப்பட்டது என்றால் சரிதான். அது 3 சென்ட் சொத்து சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 5 ஆவணம் உயில்படி கிடைத்த சொத்து அல்ல சரோஜினி பாய்க்கு தனியாக கிடைத்த சொத்து என்றால் சரிதான். ராமன்பிள்ளையின் வாரிசுகள் வனஜாஷி அம்மா, கங்காதரன் நாயர், பிரபாகரன் நாயர், கேசவன் நாயர், பாகுலேயன் நாயர், ரவீந்திரன் நாயர், கோபிநாதன் நாயர், சரோஜினி மற்றும் அம்பிகா பாய் ஆவார்கள் என்றால் சரிதான். நான் வனஜாஷியின் மகளுடைய கணவர் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி பிரபாகரநாயரின் மகன் என்றால் சரிதான். பிரபாகரன் நாயர் மற்றும் அவரதுமனைவி இறந்துவிட்டார் என்றல் சரிதான். கோபிநாதன் நாயரின் மனைவிதான் 2 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். கங்காதரநாயரின் மகன் 3 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். ரவீந்திரன்

நாயர் மனைவிதான் பகவதியம்மா என்றால் சரிதான். மற்றும் 5,ஆம் பிரதி வாதி அவருடைய மகள் என்றால் சரிதான். 6 மற்றும் 7 பிரதிவாதிகள் சரோஜினி அம்மாவின் மகள் மற்றும் மகன் என்றால் சரிதான். அம்பிகாபாயின் வாரிசுகள்தான் 8 முதல் 10 பிரதிவாதிகள் என்றால் சரிதான். அம்பிகாபாய் மற்றும் சரோஜினி பாயின் கணவர் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

10 பிரதிவாதிகளுக்கும் ராமன்பிள்ளை எழுதிய உயில் ஆவணத்தின்படி 6 சென்ட் சொத்து மற்றும் அதில் இருக்கும் வீட்டிலும் உயில் பட்டிகை சொத்தின் அடிப்படையிலும் வாரிசுதாரர் என்ற அடிப்படையிலும் சொத்துக்கள் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். 2 முதல் 10 பிரதிவாதிகள் அவர்களுக்கு உயில்படி கிடைத்த சொத்தை 1ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த கிரைய ஆவணத்தைதான் (4200/2022) ரத்து செய்யகோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணப்படி எனது மனைவிக்கு கிடைத்த சொத்து பழைய சர்வே எண் 2777/14 டி அதன் ரீசர்வே எண் 900/12 என்றால் சரிதான். அந்த 3 சென்ட் சொத்தை உயில் ஆவணத்தில் கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ. 3 ஆவணப்படி எனது மனைவிக்கு 2 3/4 சென்ட் கிடப்புப்படி கிடைக்கப்பட்ட ஆவணத்தில் கெங்காதரன் நாயர், சரோஜினியம்மா, அம்பிகாபாய் ஆகியோர்களுடைய வாரிசுகள் கட்சி அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் எழுதப்படும்போது கெங்காதரன் நாயர், சரோஜினியம்மா, அம்பிகாபாய் ஆகியோர் உயிருடன் இல்லை என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. மேற்படி நபர்கள் வாரிசுகளும் இதில் கட்சி சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். ஆகையால் 2 3/4 சென்ட் சொத்தின் முழு உரிமையும் எனது மனைவிக்கு வரவில்லை, கட்சி சேர்க்கப்படாதவர்களின் வாரிசுதாரர்கள் எனது மனைவிக்கு வழக்கு அறிவிப்பு வழங்கினார்கள் அதனால்தான் எனது மனைவியை தூண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு வழக்கறிவிப்பு வந்ததா என்கிற விபரம் எனக்கு தெரியாது.

1ஆம் பிரதிவாதிக்கு கிடைத்த சொத்தை ரத்து செய்யவேண்டுமென்று எனது தூண்டுதலின் பெயரில் காழ்புடன் போடப்பட்ட நியாயமில்லாத வழக்கு என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதிக்கு மற்ற பங்குதாரர்கள் எழுதிக்கொடுத்த சொத்தை போக்குவரவு செய்து வரி செலுத்தி அவர் தனியாக அனுபவித்து வருகிறார் என்று

சொன்னால் சரியல்ல. சொத்தை அளந்து திட்டப்படுத்த ஆணையர் நியமனம் கோரி எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உரிமையுள்ள நபர்களிடமிருந்து உரிமை பெறாமல் பொய்யாக ஆவணம் தாயர் செய்து சொத்தை அனுபவித்த பின் இந்தவ ழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. என்னுடைய துாண்டுதலின் பெயரில் எனது மனைவி தாக்கல் செய்த பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.